செ.வெ.எண்.194/2009(செமதொஅ) நாள் : 04.07.2009.

**மோசடி செய்த நிதி நிறுவனத்தில் பணம் செலுத்திய 54 முதலீட்டாளர்களுக்கு ரூ.7.97 இலட்சத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர்(பொ) திரு. அ. நம்பிராசன் அவர்கள் பெற்று வழங்கினார்.**

காஞ்சிபுரம் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு காவல் துறையினர் மூலம் மாவட்டத்தில் சீட்டு நடத்தி பொதுமக்களை ஏமாற்றும் நிதி நிறுவனங்கள் மீது வழக்கு பதிவு செய்து, முதலீடு செய்யப்பட்ட பணத்தினை முதலீட்டாளர்களுக்கு திரும்ப பெற்று வழங்கப்படுகிறது. இந்த வகையில் பல ஆண்டுகளாக காஞ்சிபுரத்திலுள்ள சுவாமி சிட்ஸ் நிறுவனம் பொதுமக்களிடமிருந்து ரூ.9,45,715/- வரை வசூலித்து மோசடி செய்துள்ளது குறித்து மேற்படி நிறுவனத்தின் மீது இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி 54 முதலீட்டாளர்களுக்கு மொத்த தொகை ரூ.7,97,565/- ஐ 03.07.2009 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) திரு. அ.நம்பிராசன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நில எடுப்பு) திருமதி. சிராஜின்னிஸா மற்றும் காவல்துறை ஆய்வாளர் திரு. குருசாமி ஆகியோர் உடனிருந்தனர்.

செய்தி வெளியிடுபவர்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
காஞ்சிபுரம்.